Name of the Newspaper: Dinakaran Date: 10-6-18

## சென்னை மெட்ரோ ரயிலில்

# தினசரி 50 ஆயிரம் பேர் பயணம்

### விமானநிலைய ஸ்டேஷன்தான் முதலிடம்



சென்னை, ஜூன் 10: நேரு பூங்கா-சென்ட்ரல், சின்னமலை-டி.எம்.எஸ் ஆகிய 2 புதிய வழித்தடங்கள் தொடங்கப்பட்டதை அடுத்து தற்போது மெட்ரோ ரயிலில் தினசரி பயணம் செய்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. முன்னதாக 28 ஆயிரம் பேர் வரையில் இருந்த பயணிகளின் எண்ணிக்கை தற்போது 17 ஆயிரம் கூடுதலாக அதிகரித்துள்ளது.

மெட்ரோ ரயில் சேவையை விரிவாக்கம் செய்யும் பொருட்டு நேரு பூங்கா முதல் சென்ட்ரல் இடையிலான 2.5 கி. மீட்டர் இடையிலான வழித்தடத்திலும், சின்னமலை-டிஎம்எஸ் வரையிலான 4.5 கி.மீ தூரத்திற்கு மெட்ரோ ரயில் கடந்த மாதம் 25ம் தேதி இரண்டு வழித்தடங்களில் புதிய மெட்ரோ ரயில் சேவையை தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி மற்றும் மத்திய இணை அமைச்சர் ஹர்தீப் சிங் புரி ஆகியோர் தொடங்கி வைத்தனர். சென்ட்ரல் நிலையத்தில் இருந்து விமான நிலையத்திற்கு விரைவாக செல்ல கூடியது என்பதால் இந்த வழித்தடங்கள் முக்கியமானதாக பார்க்கப்பட்டது.

ஏற்கனவே, சென்னையில் பல்வேறு இடங்களில் மெட்ரோ ரயில் சேவை செயல்பட்டு வந்தாலும் தினம் தோறும் மெட்ரோ ரயிலில் பயணம் செய்பவர்களின் எண்ணிக்கை 25 ஆயிரம் முதல் 28 ஆயிரம் வரையில் இருந்தது. விடுமுறை தினங்கள் மற்றும் விஷேச நாட்களில் இது 30 ஆயிரமாக காணப்பட்டது. தற்போது இரண்டு புதிய வழித்தடங்கள் தொடங்கியதை அடுத்து தற்போது 17 ஆயிரம்பேர் வரையில் கூடுதலாக தினமும் மெட்ரோ ரயிலில் பயணம் செய்து வருகின்றனர். இதனால், மெட்ரோ ரயிலில் நாள் தோறும் பயணம் செய்யும் பயணிகள் எண்ணிக்கை 45 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரையில் அதிகரித்துள்ளது. மெட்ரோ ரயில் நிலையத்தை பயன்படுத்துவர்களில், விமானநிலையத்தில் இருந்து 4,380 பேர் பல்வேறு இடங்களுக்கு பயணப்படுகிறார்கள். அடுத்ததாக, திருமங்கலத்தில் இருந்து 4,040 பேர் செல்கிறார்கள். கோயம்பேட்டில் இருந்து 3,534 பேரும், வடபழனி மற்றும் சென்ட்ரல் நிலையங்களில் இருந்து 3,369 பேரும், 3,239 பேரும் தினம் தோறும் மெட்ரோ ரயில் சேவையை பயன்படுத்தி வருகிறார்கள். எழும்பூர் நிலையத்தில் இருந்து ஆயிரம் பேர் தினந்தோறும் பயணம் செய்கிறார்கள்.